2016 ஜனவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், ஆனந்தூரில் புதிய மின் வாரியப் பிரிவு அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டுமானால், பொதுவாக வாரிய விதிகளின்படி குறைந்தபட்சம் 126 மின்மாற்றிகள் இருக்க வேண்டும். ஆனால், தற்போது ஆனந்தூரில் 15 மின்மாற்றிகள் மட்டுமே இயங்கி வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வருங்காலத்தில் மின்மாற்றிகளின் எண்ணிக்கை அதிகரிக்குமானால், அங்கே மின் தேவையும் அதிகரித்து, அதற்குரிய கட்டமைப்பு வசதிகளும் மேம்படுமானால், அந்தப் பகுதியில் 126 மின்மாற்றிகள் வருகின்றபோது புதிய மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

குளிர்பதனக் கிடங்கு

***53060—திருமதி எல். ஜெயசுதா:**

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம், இந்திரவனம் ஊராட்சியில் வேளாண் விளைபொருட்களுக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

[2016 ஜனவரி 22

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.*

திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழு கோடி தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, 100 கோடி இந்திய மக்களின் எதிர்காலமாக, அனைத்து முதலமைச்சர்களுக்கும் முதலமைச்சராக பரிணாமம் பெற்றிருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பாரும், மிக்காரும் இல்லாத ஒப்பற்ற நிரந்தர ஒரே முதலமைச்சராகத் திகழ்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரணி போற்றும் தஞ்சைக்கு அடுத்தபடியாக விவசாயம் நிறைந்த திருவண்ணாமலை மாவட்டத்தில், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்கள், மலர்கள் போன்றவற்றை நீண்டநாள் கெடாமல் பாதுகாப்பதற்காக விவசாயிகளின் நலன் கருதி, போளூர் சட்டமன்றத் தொகுதியில், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் இந்திரவனம் ஊராட்சியில் உள்ள விவசாயிகள் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். குவிந்த கைகள் விலகும் முன்பாகவே வரம் அளிக்கும் நம் தாயின் நல்லாட்சியில், இந்தக் கோரிக்கையானது மீண்டும் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிடத்திலும் கேட்டு அமர்கிறேன். நன்றி.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம்,*

2016 ஜனவரி 22]

இந்திரவனம் ஊராட்சியில் நெல், நிலக்கடலை, உளுந்து, பாசிப்பயறு, துவரை, கத்தரிக்காய், மிளகாய், தக்காளி, வெண்டை போன்ற பயிர்கள் 399 ஹெக்டேர் அதாவது 1,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 2,067 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்திரவனம் ஊராட்சியிலிருந்து, சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு 10 கிலோ மீட்டர் தூரம்தான் உள்ளது. உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஒன்று அங்கே அமைக்கப்பட்டுள்ளது. இந்திரவனம் ஓர் ஊராட்சியாகும். இங்கு கிடங்கு அமைக்கக்கூடிய அளவிற்கு உற்பத்தியோ, உற்பத்தி செய்த பொருட்களை சேமித்து வைத்து, இலாபகரமாக விற்கக்கூடிய அளவிற்கு சூழ்நிலையோ இல்லை. இந்திரவனம் ஊராட்சியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சேத்துப்பட்டு குளிர்பதனக் கிடங்கை இந்திரவனம் ஊராட்சியிலுள்ள விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

சாலையை அகலப்படுத்துதல்

***52337—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, மதவகுரிச்சி ரஸ்தா-தாழையூத்து சாலையினை இருவழிச் சாலையாக அகலப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*